# பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை

# ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

# Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


NP/09/A&P/04/12/CIR/2020 27.07.2020

மாகாண நிதிச் சுற்றுநிருப கடித இல **PF/CL/AP/02/2020**

செயலாளர்கள்,

பிரதிப் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

வடக்கு மாகாணம்

**சீர்செய்யப்படாத அரச ஊழியர் முற்பணக்கணக்கு நிலுவைகள் / மீதிகள்**

மேற்படி விடயம் தொடர்பாக,

வடக்கு மாகாண சபையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட PF/AP/02/2016 ஆம் இலக்க 13.01.2016 ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபம் மற்றும் PF/AP/CL/01/2017 ஆம் இலக்க 29.09.2017ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபக் கடிதத்திற்கு மேலதிகமாக பொது நிதித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 05/2019 ஆம் இலக்க 27.06.2019 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மாகாண நிதி ஒழுங்கு விதியின் அத்தியாயம் 7 பிரிவு 4 இன் உபபிரிவு 273.4(iii) இன் பிரகாரம் மாகாண சபையைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் முற்பணக்கடன்கள் யாவும் முழுமையாக அறவிடப்படவேண்டிய கடப்பாட்டினை கொண்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவையாகும். எனவே அவை முழுமையாக அறவீடு செய்யப்பட வேண்டியவையாகும். எனினும் நிதிக்கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படும் பலவீனம் காரணமாக இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் தீர்வு செய்யப்படாத கடன் மீதிகள், இளைப்பாறிய மற்றும் இறந்த அலுவலர்களின் கடன் மீதிகள், பதவி வெறிதாக்கப்பட்ட மற்றும் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களின் கடன் மீதிகள் நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாது கடன் நிலுவைகளாகக் காணப்படுவதுடன், கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஐய வினாவுக்கு உட்படுத்தப்பட்டு

வருவதுடன் மாகாண பொதுக்கணக்குகள் குழு மற்றும் பாராளுமன்ற பொதுக்கணக்குகள் குழுவின் பரீட்சிப்புக்களுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் உட்படுத்தப்பட்டுவருகின்றது.

03. எனவே கடன் மீதிகளை அறவிடாது விட்டுவிடுவதற்கான (waive off) கோரிக்கையினை மாகாண நிதிப்பிரமாணம் 77 ற்கமைய முன்வைப்பதற்கு முன்னதாக அவ் ஒவ்வொரு கடன் வகுதிகளின் கீழ் உள்ள நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு சகல ஏற்பாடுகளும் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் திணைக்களத் தலைவரால் எடுக்கப்படுவதுடன் தாபன விதிக் கோவையின் XXIV வது அத்தியாயம் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்ட மாகாண நிதிச் சுற்றுநிருபங்கள் மற்றும் நிதி அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**அ. இடமாற்றம் பெற்றுச் சென்ற / இடமாற்றம் பெற்று வந்த மாகாண சபை உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள்**

இடமாற்றம் பெற்றுச் சென்ற / இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவுகள் 1.6, 1.7 மற்றும் 6.3 ற்கு அமையவும், PF/AP/02/2016 ஆம் இலக்க 13.01.2016 ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபத்திற்கமையவும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய நிர்வாகக் கிளை மற்றும் கணக்குக் கிளையில் உள்ள இவ் விடயத்திற்குப் பொறுப்பான பதவி நிலை அலுவலர் புதிய அலுவலகத்தில் இருந்து கடன் நிலுவைகளை உடனடியாக அறவிட்டுக்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

**ஆ. இளைப்பாறிய மற்றும் இறந்த அலுவலர்களது கடன் நிலுவைகள்**

இளைப்பாறிய மற்றும் இறந்த அலுவலர்களது கடன் நிலுவைகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவுகள் 4.2.2, 4.2.4, 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3 ற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**இ. வெளிநாடுகளுக்குச் சென்ற அலுவலர்களது கடன் நிலுவைகள்**

வெளிநாடுகளுக்குச் சென்ற அலுவலர்களது கடன் நிலுவைகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவுகள் 3.18, 4.5, 4.6 மற்றும் 6.3 ற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**ஈ. சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்களது கடன் நிலுவைகள்**

சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்களது கடன் நிலுவைகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவுகள் 4.8 மற்றும் 6.3 ற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.


பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary — Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 E-mail: chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854(Gen) Fax : 021 222 0853 E-mail: npctreasury@gmail.com

உ. நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாத கடன் நிலுவைகள்

நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்படும் பதவி வெறிதாக்கப்பட்ட மற்றும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களது கடன் நிலுவை தொடர்பாக கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்வேண்டும்.

i. குறித்த அலுவலர் எவ்வகையிலேனும் பணிக்கு மீள சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதை நியமனத்தின் தன்மைக்கு ஏற்ப பொது நிர்வாக அமைச்சின் பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் மற்றும் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்), வடமாகாணம் அவர்களூடாக உறுதிப்படுத்துதல்.

ii. தேர்தல் திணைக்களத்திற்கு அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி வதிவிட விபரத்தினைப் பெற்று சட்டமா அதிபர் ஊடாக அறவிட நடவடிக்கை எடுப்பதுடன் அவ்வலுவலரது சொத்து சம்பந்தமான விபரத்தினை பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ளல்.

04. மேற்கூறப்பட்டவாறு அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் யாவும் மேற்கொண்டும் தீர்வு செய்யப்படாது நிலுவையாகக் காணப்படும் கடன் நிலுவைகள் தொடர்பில் மட்டும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் மாகாண ஒழுங்கு விதி 77 இன் கீழ் “விட்டு விடுதல்” அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி ரூபா10,000 ற்கு மேற்பட்ட நிலுவைத் தொகைகளுக்கு மட்டும் பிரதம செயலாளர் வடமாகாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

05. எனவே செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் மீது விசேட கவனத்தை செலுத்தி அரச ஊழியர் முற்பணக்கடன் நிலுவைகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாது காணப்படும் கடன் நிலுவைளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்

பிரதம செயலாளர், வ.மா

பிரதி: 1. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம், வ.மா
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாகாணக் கணக்காய்வு அலுவலகம், வ.மா
} தகவலுக்காக

# Application for waive off irrecoverable debts due to Advance Accounts interms of PFR 77 (FR 113)

1. Ministry /Departments: ....................................................................................................................

2. Head and Account Number: Public Officers' Advance "B" Account .:...............................

3. Subject : Waive off old loan balances of Public Officers' Advance "B" Account

4. Amount of money seeking to waive off :..................................................................................

   (Name and Designation of the Officer, Type of Loan and balances should be clearly indicated)

| Name | Designation | Type of Loan | Loan Balances |
|---|---|---|---|
| | | | |
| | | | |

5. If it is an act of waive off from the Advance "B" Account, state how long the said balances have been

   .....................................................................................................................

   .....................................................................................................................

   .....................................................................................................................

6. Reason for waive off / state, if there are any reasons for not recovering the said balances

   a) If there are any reasons for not recovering the said balances

      I. Whether it vacation of post? ..........................................................

      II. Whether it resignation from the post? ...................................................

      III. Whether it a non-pensionable post? ........................................................................

      IV. Whether the guarantors are not valid? ................................................

      V. Whether administrative procedures cannot be implemented?...............................

      VI. Whether there are any special circumstances? ..................................................

   b) State the officers if responsible for ..................................................

   c) Whether it is an act of negligence or failure in discharging of duties? ..........................

   d) If it is an advance, state the reasons for not recovering the amount in full of part thereof from the debtor or the guarantor?.......................................................................................

      (Mention the facts in detail. State the action to recover the loan by way of written evidence in a separate sheet)

   e) State whether provisions have been allocated this year to write off the loan balances?...........

..........
Date

........................
Accountant/Chief Accountant

**Note: Head of the Department can be approved up to limit Rs 10,000 in each individual case. Otherwise Application should be recommended and forwarded through the Ministry to get approval from the Chief Secretary.**

7. I approve/do not approve the waive off of the loan balances ........................... above

.......... ......................
Date Head of the Department

Secretary,
Ministry of ............................

8. Recommendation of the Head of the Department regarding the above facts

.......... ......................
Date Head of the Department

Deputy Chief Secretary – Finance

9. Recommendation of the Chief Accounting Officer regarding the above facts

.......... ........................
Date Secretary

Chief Secretary, NP

10. Recommended/Not Recommended

.......... ......................
Date Deputy Chief Secretary – Finance

11. I approve/do not approve the waive off of the loan balances ........................... above

.......... ......................
Date Chief Secretary
Northern Province

Copy - Asst. Auditor General - for information
Chief internal Auditor - for information

12. Details of the written off noted in the register

| Name of the officer | Type of Loan | Amount | CC 10 Register Page No | Signature of the Subject officer | Signature of the officer in-charge |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |